REGD. No. M. 6511

PHONE No. 85630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 106

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 13—0—0
3 மாதம் ரூ. 6—8—0
ஆயினும் அஞ்சல் முறைகளின்
இதழ் விலைப்படியது.

THE "NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF THE D.F.F.

சென்னை: புரட்டாசி 29உ வியாழன் (15—10—53) ☆ ☆ ☆ வெளியூர்: புரட்டாசி 30உ வெள்ளி (16—10—53)

"அறப்போராட்டத்திற்கு தூண்டுவது சட்ட விரோதமல்ல"

"சத்தியாக்கிரகத்திலேயே அதன் தீங்கற்ற தன்மை அடங்கியிருக்கிறது"

"பலாத்காரச் செயல்களைத் தூண்டினால்தான் சட்டப்படி குற்றம் புரிந்துள்ளதாகக் கொள்ள வேண்டும்"

பம்பாய் சர்க்காரின் அடக்குமுறைக்கு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு

புதுடில்லி, அக். 14—

அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்தைச் சார்ந்த, மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்தவரும், 'நவசக்தி' என்ற வார இதழின் ஆசிரியருமான தோழர் இராமநாத மல்லப்பா மேல்வாதி, மேற்படி பரிஷத்தின் அறப்போராட்டக் குழு உறுப்பினரும், கர்நாடக பிரஜா—சோஷலிஸ்டு கட்சியின் தலைவருமான தோழர் இராயன் கௌடா, லிங்கண்ண கௌடா, தோழர்கள் சன்னப்பா, சின்மயசாமி, பஸ்வந்தசாமி, சக்ரநாத் ஆகிய நால்வரும், 7—8—53-ல், பம்பாயில் உள்ள ஊப்ளி நகரில் நடைபெற இருந்த மேற்படி நிறுவனத்தில் அறப் போராட்டக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றிருந்தனர். அவர்களை, தார்வார் மாவட்ட மாஜிஸ்திரேட், தடுப்புக் காவல் சட்டத்தின்படி பாதுகாப்பில் வைக்க உத்தரவு பிறப்பித்தார். அதன்படி அவர்கள் பாதுகாப்புக் கைதிகளாக சிறைக்குள் தள்ளப்பட்டனர்.

தடுப்புக் காவல் சட்டத்தின்படி தங்களைக் காவல் கைதிகளாகப் பிடித்து வைக்க வேண்டிய அளவிற்குக் குற்றம் எதுவும் செய்யவில்லை என்றும், தங்களை உடனடியாக விடுதலை செய்யக் கோரியும் சுப்ரீம் கோர்ட்டுக்கு மனு செய்து கொண்டனர்.

தடுப்புக் காவல் சட்டப்படி அவர்களைக் கைது செய்ததற்கான காரணங்களாக, போராட்டக் குழுவின் கூட்டத்திற்கு முன்னதாக 26—7—53-ந் தேதி அதே ஊப்ளியில் அவர்கள் பேசிய கூட்டத்தில், போராட்டக் குழுவின் தீர்மானப்படி சத்தியாகிரகம் செய்ய வேண்டுமென்று பொதுமக்களைத் தூண்டினதாகவும், போராட்டக் குழுவின் கூட்டத்தில் மைசூர் ராஜ்யத்திலிருந்து வெளிவரும் 'நேதாஜி' என்ற தினசரி இதழின் ஆசிரியரான தோழர் வேதமூர்த்தி இடாகி என்பவர், தந்திக் கம்பிகளைத் துண்டித்தல், டெலிபோன் கம்பிகளை அறுத்தல் போன்ற பலாத்காரச் செயல்களை போராட்ட முறைகளில் சேர்த்துப் பிரசுரித்து இருந்ததாகவும், பம்பாய் சர்க்கார் குறிப்பிட்டிருந்தது.

குற்றவாளிகள் என்று கருதப்பட்ட நால்வரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்ட சுப்ரீம் கோர்ட் நீதிபதி விவியான் போஸ் அவர்கள், தடுத்ததற்கான காரணங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, போராட்டக் குழுவின் கட்டளைப்படி ஆகஸ்டு 9-ந் தேதி சத்தியாக்கிரகத்தைத் துவக்க வேண்டுமென்று ஹப்ளி பொதுக்கூட்டத்தில் இவர்கள் பேசினார்கள்.

(3-ம் பக்கம் பார்க்க)

மலான் போக்கு

"உலக சமாதானத்திற்கு" ஆபத்து!

ஐ. நா. கமிஷன் எச்சரிக்கை

நியூயார்க், அக். 14—

"தென் ஆப்பிரிக்காவில் இன்று கையாளப்பட்டு வரும் நிறவெறிக் கொள்கை ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தை மீறுவதாகுமென்றும், மனித வர்க்கம் அமைதியாக முன்னேறுவதற்கு அக்கொள்கை பேராபத்தானது என்றும், ஐ. நா. உபகுழு ஒன்று, தன் அறிக்கையில் கூறியிருக்கிறது.

முன்பு, ஐ. நா.-வின் பொருளாதார, சமூக கவுன்சிலின் தலைவராக இருந்த சிலி நாட்டைச் சேர்ந்த ஹெர்மின் சான்டாகுரூஸ் தலைமையில், தென் ஆப்பிரிக்க இனப் போராட்டப் பிரச்னையை ஆராய்ந்த இக்குழு தன்னுடைய நீண்ட அறிக்கையை, ஐ. நா. தலைவரிடம் சமர்ப்பித்தது.

ஆசிய, ஆப்ரிக்கத் தேசங்கள் கொண்ட 18 நாடுகள் கொடுத்த தீர்மானத்தின் பேரில், ஐ. நா. பொதுச்சபை சென்ற கூட்டத்தில் மேற்படி ஆராய்ச்சிக் குழுவை நியமித்தது.

நீதி நிலைத்தது; நேர்மை வென்றது

சேலம், அக். 14—

28—3—52-ல் நடந்த நாசிக்கபுரம் பஞ்சாயத்து போர்டு தேர்தலில், மாற்றுக் கட்சிக்காக உழைத்த பார்ப்பன முனிசீபைத் தாக்கியதாக நாசிக்கபுரம் கழக உறுப்பினர்களாகிய தோழர்கள் என். கே. இராசு (மாவட்டப் பிரதிநிதி), ஆறுமுகம், இராமு ஆகியோர் பேரில் ஆத்தூர் சப்—மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கு 25 வாய்தாக்களுக்குமேல் தள்ளிவைத்து, 13—10—'53ல் தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆச்சாரியார்-காமராசர் பூசல்

புதிய அமைச்சர்கள் நியமனத்தால் வளர்கிறதாம்!

மதுரை, அக். 14—

தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் கே. காமராசரின் அனுமதியில்லாமலேயே, சென்னைக்கு மூன்று புதிய அமைச்சர்களை, ஆச்சாரியார் நியமனம் செய்துள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

புதிதாகச் சேர்க்கப்பட்ட அமைச்சர்களை தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் ஒப்புக்கொள்ளவில்லை; அவ்வாறு செய்தி வெளிவந்தது, தவறு, என்றும் பேசிக் கொள்ளப்படுகிறது.

சென்னை மேல் சபையிலோ, சட்டசபையிலோ உறுப்பினராக இல்லாத ஒருவரை அமைச்சராக நியமித்துள்ளது, பலரது மனக்கசப்பை வளர்க்கக்கூடியதாக உள்ளதென்றும் கூறப்படுகிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள்

தென்னாற்காடு மாவட்ட கைத்தொழில் இலாகாவினர் ஒரு புதிய குழாய்க் கிணறைக் கண்டு பிடித்திருக்கிறார்கள், இதன் மூலம் 120 ஏகர் நிலம் சாகுபடி செய்யலாம்.

நேரு வாக்குறுதி

சென்னை, அக் 15—

ஆந்திரப் பிரிவினை காரணமாக வேலை இழக்கும் தற்காலிகச் சிப்பந்திகளுக்கு கூடுமானவரை மாற்று வேலை தேடித் தர முயற்சிப்பதாக பிரதம மந்திரி நேரு உறுதி கூறியிருக்கிறாராம்.

டில்லிக்கு பிரிட்டன் பண உதவி

கடன் பணத்தை வடவர் வாழ்வுக்கே பயன்பட வேண்டுமாம்!

புதுடெல்லி, அக். 14—

இந்தியாவுக்கு 50 லட்சம் பவுன் கடன் கொடுப்பதாக பிரிட்டிஷ் சர்க்கார் தெரிவித்திருக்கிறது. உலக பாங்கியில் பிரிட்டன் செலுத்திய பங்கு முதலிலிருந்து இக்கடன் அளிக்கப்படும்.

பிரிட்டிஷ் நிதி இலாகா காரியதரிசியும், கொழும்புத் திட்ட மாநாட்டுக்கு வந்துள்ள பிரிட்டிஷ் குழுவின் தலைவருமான ரெஜினால்ட் மாட்லிங் இத்தகவலை இன்று வெளியிட்டார்.

பிரிட்டிஷ் சர்க்காரின் இந்த யோசனையை, மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாக அவர் சொன்னார்.

இந்தக் கடன் பணத்தை தாமோதர் அணைக்கட்டுத் திட்டத்திற்கும், உருக்கு ஆலைத் திட்டத்திற்கும் பயன்படுத்த வேண்டுமென்று பிரிட்டன் தெரிவித்துள்ளது.

"தொழில்களைத் தேசியமயமாக்கும் இந்தியக் கொள்கையில் பிரிட்டிஷ் மூலதனம் வருவது தடைப்படுமா?" என்று கேட்டதற்கு, மாட்லிங் பதில் கூறுகையில், தனிப்பட்டோரின் விருப்பத்துக்கு இடமுண்டென நேரு கூறியிருக்கிறாரென்றும், சர்க்கார் மட்டும், அல்லது தனி நபர்கள் மாத்திரம் தொழில் நடத்த வேண்டுமென்பது சரியல்லவென்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், அவர் கூறுகையில், நீர்ப்பாசனம் முதலிய அடிப்படைத் துறைகளை சர்க்காரே நடத்துவதுதான் முறை; குறிப்பிட்ட காலத்துக்கு தொழில்களைத் தேசிய மாக்குவதில்லை என்ற உறுதிமொழியின் மூலம், வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்ச்சிக்கலாமென அவர் கூறினார்.

சர்க்காருக்கு நாமம் போட அகதிகள் ஆயத்தம்!

கொடுத்த கடனைக் கேட்டால் 'சத்தியாகிரகம்' என்னும் மிரட்டல்!

இந்தத் தூராக்கிருகத்துக்கு ஒரு பார்லிமெண்டு உறுப்பினர் முந்துகிறார்

பூனா, அக். 14—

அகதிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள கடனை இந்திய சர்க்கார் யாசகமாக விட்டுவிட வேண்டும். அப்படிச் செய்யாமல் வசூலிக்க கெடுபிடி செய்தால் பரந்த அளவில் 'சத்தியாக்கிரகம்' தொடங்கப்படும் என்று, நிருபர்கள் கூட்டத்தில் பேசிய பார்லிமெண்டு உறுப்பினர் சோதிராம் கித்வானி கூறியுள்ளார்.

கராச்சியை தனி மாநிலமாக்கக் கிளர்ச்சி

அக். 23-ந் தேதி பொது வேலை நிறுத்தம்

பூனா, அக். 14—

கராச்சி நகர மக்களில் பலரை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள பல கட்சிக் குழுவுகள், கராச்சியைத் தனி மாநிலமாக்க வேண்டுமென்றும், அதற்காக வருகிற அக்டோபர் 23-ந் தேதியன்று வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்றும் முடிவு கட்டியுள்ளன.

மாடுகளுக்குப் பதில் மனிதன்!

எட்டயாபுரம், அக். 13—

எட்டயாபுரத்திலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் மாடுகளுக்குப் பதிலாக மனிதனே கலப்பையைத் தாங்கி உழுவதாக செய்தி கிடைத்துள்ளது.

வெகு நாட்களாக மழையில்லாமல், வரண்ட பகுதியாக அது இருந்தது; அண்மையிலே அங்கு நல்லமழை பெய்திருப்பதின் விளைவாக குளங்கள் நிரம்பியுள்ளன; விவசாய வேலைகள் அரிதமாக நடைபெற்றுவருகின்றன.

ஐவர் சிறையில்!
இன்று
45—வது நாள்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 15—10—1953 வியாழன்

காவலன் வருவான்; கசடர் ஒழிவர்!

"காவலன் வருவான்; கசடர்கள் ஒழிவர்!" என்று மலை மீதேறி நம்பிக்கை ஒளிவாகிலே தெரியும் திக்கை நோக்கி, துயர் கொண்டு நின்றானும், அந்தக் காவலாளி.

முரசுகொட்டி போருக்குப் புறப்பட்ட மன்னன் நாட்டின் பெருமைக்காக களத்திலே போராடிக் கொண்டிருக்கிறான்.

ஆனால், அந்த அழகனுக்கு அமைந்த மங்கையோ, நாட்டினர் அலறும் வகையில் அற்ப வாழ்வில் ஈடுபட்டு விட்டாள்.

காவலன் சென்றதும், காரிகை செய்யும் அட்டகாசத்தைக் காணச் சகிக்காத காவலாளி, மனம் நொந்தான்.

இந்த நாட்டின் பெருமை குன்றுகிறதே என்று நெஞ்சு குமுறியது.

மன்னன் வெற்றிபெற்றுத் திரும்பி வந்தால், வரும் வழியெல்லாம் தீப்பந்தம் ஏற்றி வருவேன் என்று கூறிப்போனான்.

ஆகவேதான், அரண்மனை அந்தப் புரத்திலே நடக்கும் அட்டகாசங்களை அடக்க, மன்னன் எப்பொழுது வருவான் என்று, மலையுச்சி ஏறி மன்னன் வருகையை எதிர்நோக்கி நின்றான் அந்தக் காவலாளி.

• • •

நாட்டிலே இன்று ஆளவந்தார் ஆற்றிடும் அர்த்தமற்ற செயல்களையும், அவர்கள் வாயிலிருந்து விழும் ஆபாச மொழிகளையும் கேட்டால், மன்னன் போருக்குச் சென்றவுடன், மதிகெட்டுப் போனாளே அந்த மகாராணியின் ஞாபகம் தான் நமக்கு வருகிறது.

திராவிடத்தின் மானம் போக்க, தியாகத் தீயிலே குதித்த வீரர்கள் இன்று சிறைக்குள்ளே இருக்கின்றனர். நாட்டிற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த மாபெரும் தலைவர்கள் ஐவரும், இன்னும் இரண்டு மாத காலத்திற்கு நாட்டில் நடப்பதைக் காண முடியாது. அதைவிட இன்னும் பல நாட்களுக்கு, தன் அழகு மொழியால் புரட்சி பிரசாரம் செய்து வந்த வீரர்கள் திருச்சி சிறையிலிருந்து வர முடியாது.

இந்த நிலையிலே, 'நம்மை ஆளவந்தார்கள், நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் ஓடி ஓடி, வாரி இறைத்து வரும் வார்த்தைகளுக்குத் தனி அகராதி தேவைப்படுகிறது!

"நம்மை எதிர்த்துப் பேசும் துணிவு கொண்டோர்களா, இவர்கள்?" என்று, மமதையால் குதித்து, மதிகெட்டத் தன்மையில் சர்வாதிகார ஆட்சியை, மக்களாட்சி என்ற போர்வையில் அமைத்து, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை உருவாக்கும் வேலையில் ஈடுபட்டனர், இந்த ஆழ்வார்களும், அவர்கள் தலைவர்களும்!

இழந்த வாழ்வை, மீண்டும் பெற்று, நல்வாழ்வை நாட்டவருக்குச் சொந்தமாக்கப் புறப்பட்ட மக்கள் தொண்டர்கள், "அவன் மகாவிஷ்ணுவாகவும், மாதவம் புரிந்தவனானாலும் சரி; ஆசிய ஜோதியானாலும், 'அர்த்த சாஸ்திரம்' இயற்றிய சாணக்கியனின் பிரதிபிம்பமானாலும் சரி; யாராயிருந்தாலும், மக்கள் நலனுக்குத் தடையாக நிற்கும் எவனையும் எதிர்த்திடுவோம்!" என்று, சூளுரை பூண்டு புறப்பட்டனர். அவர்கள் புரிந்த மக்கட் சேவை, ஆளவந்தார்களுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

சுயநலமிகளுக்குச் சாட்டையடியாக இருந்தது.

வைதீகபுரியை ஆட்டியது.

சந்தர்ப்பவாதிகளுக்கு பேரபாயத்தைத் தந்தது!

"மக்களை சுரண்ட இனி விடோம்! பெற்றால் திராவிடநாடு; இன்றேல் இடுகாடு!" என்று, கொள்கையை முன்நிறுத்தி, மக்களைத் தட்டியெழுப்பினர்—தன்னலத்தையும், தான்தோன்றித்தனத்தையும் ஒதுக்கி விரட்டிய அந்த வழியர்கள்.

"தமிழனை இகழ்ந்தவனை தாய் தடுத்தாலும் விடோம்!" என்று கண்ணியத்தையும், நேர்மையையும் கைவிடாமல் அறப்போரில் ஈடுபட்டனர்.

இதுதான் சமயமென்று, தனக்குக் கிடைத்த அதிகாரத்தை தவறான பாதையில் தள்ளினர், இந்த ஆளவந்தார்கள்

'மக்களாட்சி'யை உண்டாக்கி விட்டதாகக் கூறிக்கொள்ளும், இந்தத் தேசியத் தோழர்கள், மக்களாட்சியில் மாற்றுக் கட்சிகளுக்குக் கொடுக்கவேண்டிய இடம் எது என்பதைத் தெரிந்து கொள்ளாதது மாத்திரமில்லை, மாற்றுக் கட்சிகளை அடக்கி ஒழித்துக்கட்டும், பாசிச வேலையில் ஈடுபட்டனர்.

தலைவர்களை சிறைக்குள்ளே தள்ளினர்.

தொண்டர்களை தடியால் அடித்து ஓட்டினர், துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

இரத்தக் கறைகளைக் கழுவலாம். ஆனால் அது ஏற்படுத்திய பழிச்சொல் என்றும் போகாது.

இருந்தும் ஏகாதிபத்திய மனப்பான்மையில் தான்தோன்றித்தனமாகச் செல்லும் ஆச்சாரியாரும், ஆசிய ஜோதியும், அவர்கள் சகாக்களும், இன்று தங்கள் சுயரூபத்தை வெகு ஆபாசமான முறையில் காட்டத் தொடங்கியிருக்கின்றனர்.

நம்மை ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று நேருவும், ஆச்சாரியாரும் நினைப்பதில் தவறில்லை. வடநாட்டு முதலாளித்துவப் பிரதிநிதியும், தென்னாட்டு வைதீகத்தின் பிரதிநிதியும் வேறு எதை நினைக்க முடியும்? ஆனால் அதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட நேரம்தான் நமமுடைய தோழர்கள் நன்கு கவனித்துக் கொள்ளவேண்டியது

காவலன் போருக்குச் சென்றதும், கற்பை கடைத்தெருவில் விலை கூறினளாம், அந்த கிரேக்க நாட்டுப் பேழகி. அதுபோல, தலைவர்களையும், அவர்தம் தோழர்களையும் சிறைக்கோட்டத்தில் வைத்துவிட்டபின், "இனி இந்த மக்கள்தானே......!" என்ற அலட்சியமும், தந்திரமும் கலந்த எண்ணத்தில தங்கள் ஒழிப்பு வேலையை ஆரம்பித்திருக்கின்றனர், ஆச்சாரியார் திருக்கூட்டம்.

'எறும்பு' என்று கிண்டல் செய்து பார்க்கிறார் ஆச்சாரியார்.

'பாம்பு' என்று பயத்தோடு கூறிப் பார்க்கிறார்.

'இவர்களை ஒழித்துவிடுவேன்' என்று போகிற இடமெல்லாம் கூறி வருகிறார்.

இதில் இன்று நமக்கு வந்த ஆச்சரியமெல்லாம், இந்த ஆபத்தான வேலையை, ஆழ்வார், அனுமார் முதலிய பட்டங்களை வாங்கிய கோவை மில் முதலாளிகளின் கைப்பாவை, நிதி மந்திரி திரு. சுப்பிரமணியமும் எடுத்துக்கொண்டிருக்கிறாரே, என்றுதான்.

ஒரு கூட்டத்திலே, "இந்த தி. மு. கழகத்தை எப்படி அடக்குவது என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்!" என்றாராம், இந்த நிதி மந்திரி.

மற்றோரிடத்திலே, "இந்த தி. மு. கழகத்தை இனி சகித்துக்கொண்டிருக்க முடியாது!" என்றாராம்.

பிறிதோரிடத்திலே, "கருப்புக் கொடி காண்பித்தவர்கள் கூலிகள்!" என்றாராம்.

இன்னும் போகிற கூட்டங்களிலெல்லாம் ஏதாவது கூறிக்கொண்டேகூட செல்லலாம்!

பெரிய இடத்திலே அமர்ந்துவிட்ட காரணத்தாலேயே, எவரும் பெரிய மனிதர்களாகிவிட முடியாது.

ஆச்சாரியார்-காமராஜ் போட்டியில், நடுவில் எங்கேயோ கிடந்த இந்த அனுமாருக்கு 'சான்ஸ்' அடித்தது.

கொள்கையும், மக்கள் நலமும், எந்தப் பெரிய மனதும் இல்லாமல் நாட்டிலே நய வஞ்சகத்தால் உலவி வரும் ஆச்சாரியார், இவரைப் பிடித்து வந்து நிதி மந்திரியாக்கினார்.

இன்று மக்கள் வரிப் பணத்திலிருந்து, ஒரு பக்கம் சர்க்கார் காரியாலயங்களிலிருந்து குமாஸ்தாக்கள் வெளியேற்றப்படும் பொழுது, மறு பக்கத்திலே ஆயிரக் கணக்கில் சம்பளம் வாங்கும் இந்த நிதி மந்திரி, நாட்டின் மானத்தைக் காக்கப் புறப்பட்டத் தன்மானச் சிங்கங்களை கூலிகள் என்கிறாராம்.

ஐந்து ஏக்கரும், பெர்மிட்டும், ஆயிரக்கணக்கில் சர்க்கார் கணக்கிலும் வாங்காத நம் தோழர்களை 'கூலிப் பட்டாளம்' என்கிறார், பரந்த நோக்கம் தேவையென்று கூறும் இந்த பச்சோந்தி அரசியல் ஆசாமி.

ஆச்சாரியார்தான், நம்மை ஒழித்துக்கட்ட கடமைப்பட்டவர். அவர்—குலம், வேதம், வர்ணம், நாகரீகம் எல்லாவற்றையும் காக்கும் பொறுப்பை ஏற்றிருப்பவர். வட நாட்டு ஏகாதிபத்தியத்தை திராவிடத்தில் நிரந்தரமாக்க ஒப்பந்தம் செய்து கொண்டவர். பழைமையைக் காக்கப் பாடுபடுபவர்.

இந்த நிதி மந்திரிகளுக்கு என்ன கோபம் என்று நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை ஆழ்வாராதிகளில் ஒருவரானதற்கு, பிரதி உபகாரம் செய்கிறாரா போலும்.

இந்தப் பிற்போக்குவாதிகள், நம்மை ஏதேதோ தூற்றுகிறார்களே என்று நாம் வருத்தப்படத் தேவையில்லை.

எந்த மக்கள் அறியாமையில் ஈடுபட்டு வாழ்விழந்து நிற்கிறார்களே என்று நெஞ்சுருகி, நம் வாழ்வை அர்ப்பணித்திருக்கிறோமோ, அந்த மக்கள் கூட்டத்தில நிதி மந்திரியாரும் ஒருவர்தான்.

ஆகவே, அவருக்குக் கோபமும், நம்மைக் கண்டால் பயமும் வருவதில் ஆச்சரியமில்லை.

அவருக்குத் தனிப்பட்ட வாழ்வு உயர்ந்துவிட்டது; ஆகவே. நாட்டையும், இனத்தையும் மறந்து, தன்மானத் தொண்டர்களைக் 'கூலிப் பட்டாளம்' என்று கூறிவிட்டார்.

சுயநலம், மிக ஆபத்தான வியாதி. அதுவும், அரசியலில் கேவலமானது. அந்த ஆபத்தான பாதையில் வெகு வேகமாகச் செல்கின்றனர், காங்கிரஸ் தோழர்கள்.

அதன் முடிவுக்குத்தான் பாசிசம் என்று பெயர்!

இந்தப் பாதையில் அவர்களை இழுத்து விட்டுவிட்டு, ஆச்சாரியார் வேடிக்கை பார்க்கிறார்—இல்லை, தன் பதவியை கெட்டியாக்கிக் கொள்கிறார்.

தலைவர்கள் உள்ளே இருக்கும்போது, வெட்கமில்லாமல், பேடித்தனமாகத் தொண்டர்களை, 'கூலிப் பட்டாளம்' என்கிறார், சுப்பிரமணியம்.

இதே 'கூலிப் பட்டாளம்' என்ற வார்த்தையைத்தான் ஆறு ஆண்டுகளுக்குமுன், சான் பிரான்சிஸ்கோவில், இந்தியத் துருப்புக்களின்மீது வீசினார், விஜயலட்சுமி பண்டிட்!

ஆனால் இன்று, அதே கூலிப்பட்டாளங்களைத்தான், சூரப் பட்டாளங்கள் என்று கூறி கொரியாவுக்கு அனுப்புகின்றனர், இன்று புகழப்படும் கரியப்பாவும், திம்மையாவும், ராஜேந்திர சிங்ஜியும், சௌத்ரியும் அன்று 'கூலி பட்டாளங்கள்' வகையில் சேர்க்கப்பட்டவர்கள்தான்! இந்தப் பழைய சம்பவத்தைத் தேசியத் தோழர்கள் மறந்துவிடக் கூடாது.

அன்று கோவையிலே கருப்புக்கொடி காட்டியவர்கள் கூலிகள்தான்!

அந்தப் பட்டாளம் டாடாக்களாலும், பிர்லாக்களாலும் வளர்க்கப்படும் பட்டாளம் அல்ல.

வெறும் கூலிகள் அடங்கிய பட்டாளம்.

நிதி அமைச்சர் கிண்டல் செய்கிறார்.

ஆனால் உண்மையில் நாங்கள் எல்லோரும் கூலிப் பட்டாளம்தான்! வறுமையில் வாடி இன்று வறுமையையும், இழந்த வாழ்வையும் பெற புறப்பட்டிருக்கும் பஞ்சைகளின் பட்டாளம்.

எங்கள் சகோதரர்கள் பிரஞ்சு நாட்டிலே அரசமைத்தனர்.

ரஷ்ய நாட்டிலே புது அத்தியாயத்தையே ஆரம்பித்தனர்.

அவர்கள் பரம்பரையைச் சேர்ந்த நம்மைக் கூலிகள் என்று அழைக்கிறார் அமைச்சர். அன்று கருப்புக்கொடி யேந்தியவர்கள், இந்த ஆளவந்தார்களின் திறமைக் குறைவால், நலிந்துபோய் உரிமைக்குப் போராட துடித்து எழுந்துவந்த கூலிகள். அவர்கள் யாரிடமிருந்தும் கூலி வாங்கி வரவில்லை. ஆனால், 'கூலி தருகிறேன்' என்று கூறி, வஞ்சகமாகப் பதவியில் அமர்ந்து, மக்களை மறந்து நிற்கும் ஆளவந்தாரைக் கண்டிக்க வந்தவர்களே தவிர, கூலி வாங்கிக்கொண்டு அல்ல. ஆனால், அப்படிப்பட்ட மக்கள் தொண்டர்களை, அவர்கள் கொடுக்கும் வரிப் பணத்திலேயே வாழ்க்கை நலத்தை நாடும் பெரிய கூலியான நிதி மந்திரி, 'கூலிப் பட்டாளம்' என்று கூறியது விசித்திரம்தான்.

ஏதோ பாவம், அவர் ஸ்தானத்தைக் காப்பாற்றிக் கொள்ள அப்படிக் கூறிக்கொள்கிறார் போலும்!

இந்தத் தன்னலவாதிகளும், பச்சோந்தி அரசியல் சூதாடிகளும், எந்த விதமான அபத்தத்தைக் கூறினாலும் கூறி போகட்டும். அது அவர் சிறுமதி என்று மன்னிப்போம்.

இழிசொல் கேட்டு பழக்கமில்லாதவர்கள் அல்ல நாம். பழிசொல் கூறினால் கூட, கடமை தவறு பண்ணினர் நாம். நமது தலைவர் கூறிப்போனது "கண்ணியம், கடமை!" என்ற இரு மாபெரும் தத்துவங்கள்.

அந்தக் கண்ணோட்டத்தில் இந்த ஆளவந்தார்களை நிறுத்தி இவர்கள் எந்தவிதமானமொழியில் பேசி, நம்மை வழி தவறி நடக்கத் தூண்டினால்கூட, நாம் நமது கொள்கை வழி நடப்போம். பொதுச் செயலாளர் கூறிய கட்டளையை மீறாமல், உழைத்தோம், உழைப்போம், உழைத்துக் கொண்டே இருப்போமே ஒழிய, வேறு வழியில் சென்று வாதுக்கிழுத்தோரை, வகை தவறி தீண்டோம் என்று உறுதியோடு நம் தோழர்கள் இருக்க வேண்டும். மற்றவற்றை, "காவலன் வருவான்; கசடர்கள் ஒழிவர்!" என்ற அளவில் விட்டு வைப்போம்.

டிரீஸ்டியில் தடையுத்தரவை மீறி ஆர்ப்பாட்டம்

இத்தாலி சார்பினரும் யூகோ சார்பினரும், கிளர்ச்சி புரிந்தனர்

டிரீஸ்டி, அக். 14—

அமெரிக்க, பிரிட்டிஷ் பாது காப்பில் உள்ள டிரீஸ்டி பகுதியில் தடையுத்திரவு போடப் பட்டு இருக்கிறது. இத் தடையை மீறி பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள், இத் தாலி யூகோஸ்லாவியா, சார் புடன் தடையை மீறி ஊர்வல மாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். 'சுதந்திரமாக' இருக்கவேண்டும் என்னும் கோட்பாடு கொண்ட வாலிபர் களும் இதில் பங்கு கொண்ட னர். குறிப்பிட்டுள்ள ஓர் இடத்தில் இவர்களுக்குள் கை கலப்பு ஏற்பட இருந்த பேராபத்தை, பிரிட்டிஷ் போலீஸ் படை மிக சாமர்த் தியமாகத் தடுத்து, மூன்று சார்பினரை வெவ்வேறு தெருக்கள் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்து வெற்றி கண்டது.

ரூ. 60,000!

நகர சபைக்கு டிராம்வே கம்பேனியின் வரி பாக்கி

சென்னை, அக். 14—

டிராம்வே கம்பெனியை நகர சபையே ஏற்று நடத்த முடியுமா, என்பது பற்றி, நேற்று நகர சபை கமிஷனருடன் மேயர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

நகர சபைக்கு, கம்பெனியிட மிருந்து 60 ஆயிரம் ரூபாய் பாக்கி வர வேண்டியிருக்கிறதென்றும், இது நீங்கலாக, தளவாட சாமா ன்களுக்கென 39 ஆயிரம் ரூபாய் பாக்கியுள்ளதென்றும் தெரிய வருகிறது.

சென்னை சர்க்கார் இலாகாக்கள் மாறுதல்

சென்னை, அக். 14—

சிக்கனத்தை உத்தேசித்து, சென்னை சர்க்கார், தலைமைக் காரியாலயத்தை சீர்திருத்தி அமைத்துள்ளனர். தற்போதுள்ள 12 பெரிய இலாகாக் களுக்குப் பதிலாக 9 இலாகாக் களே இருக்கும்; இந்த மாறுதல் அடுத்த வாரம் முதல் அமுலுக்கு வரும்.

மூன்று காரியதரிசிகள் பதவி கள் குறைக்கப்பட்டுள்ளதால், செலவு குறையுமென்றும், இவர் களுடைய சம்பளத்தின் மூலமே வருடத்திற்கு ரூ 50,000 மிச்ச மாகுமென்றும் நம்பப்படுகிறது.

"ஒன்றே சொன்னார் நன்றே சொன்னார்!"

கொழும்பு, அக். 13—

"குழந்தைப் பருவத்திலேயே, 'குணம்' அமைந்து விடுகிறது; இந்தப் பருவத்தில் ஏற்பட்டு விடும் குணத்தை பின்னர் மாற்றுவது மிகக் கஷ்டம்."

"இன்று, குழந்தைகள் எந்த மாதிரி வளர்க்கப் படுகிறார்களோ அந்த மாதிரிதான் 14 ஆண்டுகளுக்குப் பின் இருக்கப் போகிறார்கள்."

"இங்கிலாந்தில், 1929-ம் ஆண்டில், அதிகக் குற்றங்கள் ஏற்பட்டதன் காரணம், 15-ஆண்டுகளுக்கு முன்பு முதல் உலக யுத்தம் காரணமாக, வீட்டு வாழ்க்கையில், தகுந்த பயிற்சி ஏற்படாமல் குறைந்ததுதான்."

—இவ்வாறு; இலங்கை சர்க்காருக்கு உலக சுகாதார நிலையத்தினரால் அனுப்பப்பட்ட ஆலோசகர் கூறியுள்ளார்.

இலங்கை இந்தியர் பிரச்சினை

தேசாய் நம்பிக்கை

சென்னை, செப். 14—

இந்தியாவுக்கும் — இலங்கைக்கும் இடையேயுள்ள முக்கியமான பிரச்சினைகள் மீண்டும் பேச்சு வார்த்தை ஆரம்பிக்க இலங்கை புதிய பிரதமர் சர் ஜான் கொத்தலவாலா முயற்சிப்பார் என்று இந் திய ஹை கமிஷனர் சி. சி. தேசாய் நம்பிக்கை தெரிவித் தார்.

புது டெல்லியிலிருந்து இங்கு வந்து சேர்ந்த தேசாய், கொழும் புக்குப் புறப்படு முன்னர், நிருபர் களுக்கு அளித்த பேட்டியில், இலங்கை—இந்திய பிரச்சினைகள் பற்றி இலங்கை புதுப் பிரதமர் நன்கு அறிவார் என தேசாய் கூறினார்.

கல்லக்குடி அறப்போர்

★

இன்று

94-வது நாள்

★

கல்லக்குடி அறப்போர் தலைவர் மு. கருணாநிதி, மற்றும் பல தோழர்கள் சிறையில்

இன்று

93-வது நாள்

இலங்கையின் புதிய மந்திரி சபை

மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்

கொழும்பு, அக். 14—

இலங்கையின் புதிய மந்திரிகள் பதவியேற்றனர். மந்திரி களின் எண்ணிக்கையைக் குறைப் பது பற்றியும், இலாக்காக்கள் மாற்றம் பற்றியும் விரைவில் ஏற் பாடுகள் செய்யப்படுமென பிரத மர் கொத்தலவாலா நிருபர்களி டம் கூறினார்.

அயல் நாட்டிலாகா செயலா ளர் வைத்தியநாதன், இப்போது மந்திரியாக இருப்பதால் அவருக் குப் பதிலாக ஜி. ஜி. அனுவிகாரே நியமிக்கப்பட்டிருக்கிறார். புதிய மந்திரி சபை பற்றி இலங்கை வட் டாரத்தில் அதிருப்தி ஏற்பட்டி ருக்கிறது.

புதிய பிரதமர் அலவன்சை வெறுக்கிறார்

இலங்கையின் புதிய பிரதமர் கொத்தலவாலா, தம் சம்பளத் தில், ஆண்டுக்கு ரூ. 1800 குறைத் துக் கொள்வார் என இன்று தக வல் வெளியாயிருக்கிறது. அல வன்ஸ் ரூ. 1,800-யையும் கைவிட அவர் உத்தேசித்திருக்கிறார்.

கல்லக்குடி அறப் போராட்ட வழக்கு

அக். 26-ந் தேதிக்கு ஒத்திவைப்பு

19—10—53 அன்று நடை பெறுவதாக இருந்த 'கல்லக் குடி' போராட்ட வழக்கு, 26—10—53 அன்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று, ஏ. பி. தர்மலிங்கம் தெரிவிக் கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

மதுரை:

17—10—53 சனி மாலை
கீழ் மார்க்கெட் அண்ணா திடலில்
பேசுவோர்:
ஏ. கோவிந்தசாமி
இரெ. இளம்வழுதி
எஸ். முத்து

★

காரைக்குடி:

18—10—53 ஞாயிறு மாலை
தலைவர்: எஸ் வி. லிங்கம்
பேச்சாளர்கள்:
ஏ. கோவிந்தசாமி எம் எல்.ஏ.
எம். எஸ். ராமசாமி
கவிஞர் கண்ணதாசன்

★

சித்தூர்:

18—10—53 ஞாயிறு மாலை
தலைவர்: எர்ரய்யா
பேச்சாளர்கள்:
எஸ். எஸ். ராஜேந்திரன்
கே. டி. எஸ். மணி
எஸ். கேசவன்

ஆண்டு விழா

வில்லிவாக்கம் இரவு பாடசாலையின் இரண்டாம் ஆண்டுவிழா 16—10—'53 மாலை தோழர் வி. டி. அரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். கே. லோகநாதம், கோ. இறைமுடிமணி, வி. வி. முருகேச பாகவதர், என். சுப்ரமணியம், வி. ஏ. தாமோதரம், எம். கிருஷ்ணசாமி ஆகியோர் பேசுவர்.

ஆங்கிலோ-அமெரிக்கப் படைகள்

— (:) —

டிரீஸ்டியை காலி செய்கின்றன

நாற்கூட்டுச் சாலைகளில் உள்ள கைகாட்டிகளும் அகற்றப்பட்டுள்ளன

டிரீஸ்டி, அக். 14—

ஆங்கிலோ - அமெரிக்கப் படைகள், டிரீஸ்டியை விட்டு வெளியேறும் அறிகுறி தென் படுகிறது. அதற்கான மூட்டை முடிச்சுகள் கட்டப் படுகின்றன. வெளியேறி விடுவதற்கான முன்னேற் பாடுகள் மிகவும் ஜரூராக நடப்பதை அங்குள்ள மக்கள் கண்டு வருகின்றனர்.

நாற்கூட்டுச் சந்துகளில் புதைக்கப்பட்டு இருந்த கை காட்டிகள்கூட அகற்றப்படுவ தாகச் சொல்லப்படுகிறது.

பாலங்களுக்கு உபயோகப் படுத்தப்படும் தண்டவாளங் கள் முதல் சாதாரண செப்புக் கம்பிகள் வரை, சுமார் 80,000 டன் நிறையுள்ள சாமான்களை பிரிட்டன் வெளியேற்றிவிட் டது. இவைகளில் பெரும் பகுதி மேற்கு ஜெர்மனிக்கு புகைவண்டி மூலம் அனுப்பப் படுகிறது என்று நம்பப்படு கிறது.

சீனாவின் 'பொக்கிஷம்!'

ஹாங்காங், அக். 14—

சீனாவில், பெட்ரோலியமும், இயற்கை வாயுக்களும் ஏராள மாகக் கிடைக்கிறதென்று ரஷ் யாவின் பூதத்துவ ஆராய்ச்சி நிபு ணர் பீகிங் சர்க்காருக்கு சமர்ப் பித்துள்ள ரிப்போர்ட்டில் குறிப் பிட்டிருக்கிறார்.

அறப்போராட்.....

(1 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்று குற்றம் சுமத்தப் பட்டு இருக்கிறது என்று சொன்னார்.

'இந்தக் குற்றச்சாட்டைப் பொறுத்த வரையில், தடுப்புக் காவலுக்கு ஆளான இவர் களோ, போராட்டக்குழுவோ பலாத்காரச் செயலைத் தூண்டி யதாக கூறப்பட்டில்லாததால், இவர்களுடைய நடவடிக்கை யில் எந்தவித சட்ட விரோத மும் கிடையாது.'

'நடைபெற்ற பொதுக் கூட்டத் தில் தூண்டப்பட்டதாகச் சொல்லப்படும் சத்தியாக்கிர கம் என்பது, தீங்கற்ற தன் மையையே உள்ளடக்கிக் கொண்டிருப்பதால், அதைக் குற்றச்சாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமானால், 26—7—53-ல் நடைபெற்ற போராட்டக் குழு கூட்டத்தில் தோழர் வேதமூர்த்தி சிபாரிசு செய்ததாகச் சொல்லப்படும் பலாத்காரச் செயல்களுடன் இணைத்தாக வேண்டும்."

"இங்குள்ள மனுவைப் பொறு த்தவரையில், மனுதாரர்கள், பலாத்காரச் செயல்களைத் தூண்டினார்கள் என்றோ, வேறு எந்த வகையிலாவது வேதமூர்த்தி இடாகியோடு ஒன்றுசேர்ந்து இருந்தார்கள் என்றோ குற்றச்சாட்டில் சர்க் கார் குறிப்பிடவில்லை.

"வேதமூர்த்தி, இடாகியின் பலாத்கார யோசனைகளை, போராட்டக்குழு அறவே புறக் கணித்து விட்டதை, தங்கள் மனுவில் மனுதாரர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். இதை சர்க் கார் மறுக்கவில்லை."

"இதன்படி, பலாத்காரச் செயல் களைத் தூண்டுவதிலிருந்து போராட்டக்குழு விலகிக் கொண்டு இருக்கிறது என்ப தும், பலாத்காரத்துக்கு எதி ராகவும் இருக்கிறது என்பதும் நன்கு விளக்கமாகிறது."

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பைக் கூறியவாறு நீதிபதி விவியன் போஸ்மேல்குறித்துள்ள தீர்ப் பில் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன், அக். 10—

"ஒவ்வொரு பெண்களும், உலகிலேயே, தான் தான் மிக வும் அழகி என்று மனதில் நினைத்துக்கொண்டால், உண் மையில் அவர்கள் அழகியாக இல்லாதபோதிலும் அழகியாக மாறி வருவது நிச்சயம்" என்று 'மேக்கப்' நிபுணர் ஒருவர் கூறு கிறார்.

இன்று அமுலாகும் - சொத்து வரிச் சட்டம்

வழக்கறிஞர்களுக்கே வரப்பிரசாதம்?

டெல்லி, அக். 15—

ஒருவர் மாண்ட பின், அந்த சாக்காட்டின் காரணமாக அவருடைய வாரிசுதாரருக்கு மாற்றப்படும் சொத்தில் ஒரு பங்கை வரியாக அரசாங்கம் எடுத்துக் கொள்ளும் வகையில் நிறைவேற்றப்பட்ட 'சொத்து வரிச் சட்டம்' இன்று முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக, புதுடெல்லியிலிருந்து இன்று வெளியான இந்திய சர்க்கார் கெஜட் அறிவிக்கிறது.

"எஸ்டேட்ஸ் டியூடி" என்று ஆங்கிலத்தில் கூறப்படும் இம்மசோதா, ராஜாங்க சபையிலும், மக்கள் சபையிலும் சென்ற ஓராண்டு காலமாக விவாதிக்கப்பட்டு, சென்ற மாதம்தான் சட்டமாக நிறைவேறியது.

இந்த மாதிரி, வளர்ந்து வரும் தனிப்பட்ட முதலாளிகளின் சொத்தில் ஒரு பகுதியை சர்க்கார் எடுத்துக் கொள்வதின் மூலம், பெரும் பணக்காரர்களின் வளர்ச்சியை தடுக்கக்கூடிய மரணவரிச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற யோசனையை 1925-ம் ஆண்டிலேயே, அப்போழுது கூடிய வரி விசாரணைக் கமிட்டி எடுத்துச் சொல்லியது. ஆனாலும் இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைகள் காரணமாக இந்நாள்வரை, அந்த எண்ணம் ஈடேறவில்லை.

முற்போக்கான நாடுகள் எல்லாவற்றிலும் விதிக்கப்படும் இந்த மரணவரி, நாட்டில் பெரும் முதலாளிகள் தோன்றுவதையும், அவர்களுக்குப் பின் அவர் வாரிசுதாரர்கள் அந்த சொத்திற்கு மேல் அதிகச் சொத்து சேர்த்து கோடீஸ்வரர்கள் ஆவதையும் ஓரளவுக்குத் தடை செய்யும்.

இப்பொழுது இந்திய உப கண்டத்தில் இந்தச் சட்டம், ஜம்மு காஷ்மீர் பகுதிகளில் செல்லுபடியாகாது. இந்திய உபகண்டத்தில் இருக்கும் எல்லா சொத்துக்களுக்கும்— அசையும், அசையா பொருள் கள் எல்லாவற்றிற்கும் வரி விதிக்கப்படும்.

இந்தியர்களுக்கு வெளிநாட் டிலிருக்கும் சொத்துக்க ளுக்கு இந்த வரி விதிக்கப்பட மாட்டாது.

சொத்து வரியானது ஒருவ ரது மரணத்துக்கும் பின், கைமாறுகிற சொத்தின் மதிப்பை அனுசரித்து விதிக் கப்படுமே தவிர, யாருக்குப் போய்ச் சேருகிறது என்று கணக்கிட்டு வரி விதிக்கப்படுவ தில்லை.

சட்டத்தில் நிர்ணயிக்கப் பட்டுள்ள வரி விகிதங்கள் படிப்படியான ரீதியில், சொத் தின் மதிப்பு உயர உயர, வரி விகிதம் அதிகமாகிக்கொண்டு செல்கிறது.

ஹிந்து கூட்டுக் குடும்பங் களிலிருந்து கிடைக்கும் சொத்துக்களின் மதிப்பு, 50,000 ரூபாய்க்குக் குறைந் திருந்தால் வரி கிடையாது.

இதுவும், இன்னும் பிற சட்டத்தின் அம்சங்கள் பூரா வையும் வெளியிட்டிருக்கிறது, இந்திய சர்க்கார் கெஜட்.

* * * இப்பொழுது இருக்கிற நிலைமையில் இந்த சட்டம் வக்கீல்களின் வரப்பிரசாத மாகத்தான் இருக்குமென்று தோன்றுகிறதே ஒழிய, பெரும் பணக்காரர்களின் வளர்ச்சியை அடக்கும் சட்டமாக உதவும் என்று தோன்றவில்லை.

'புதிய கல்வித் திட்டத்தைக் கைவிடுக; டால்மியாபு'த்தை கல்லக்குடியாக்குக'

சோமரசம்பேட்டை பஞ்சாயத்து போர்டு தீர்மானம்

திருச்சி தாலுக்கா, சோமரசம்பேட்டை பஞ்சாயத்து போர்டு விசேஷக் கூட்டம், 8—10—53-ல் தோழர் கே. எம். முத்துசாமி தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம், திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த கல்லக்குடி என்னும் கிராமத்தில், தொழிலதிபர் டால்மியா என்பவர், தமிழர்களை அடிமைப்படுத்தும் எண்ணத்துடன் தன் தொழிற்சாலையான சிமெண்ட் பாக்டரி வைத்திருக்கும் ரயில்வே நிலையத்திற்கு, அப்பெயரை மாற்றி, எதேச்சாதிகார எண்ணத்துடன் தன் சொந்தப் பெயரான 'டால்மியா' என இணைத்து, 'டால்மியாபுரம்' என்று மேற்படி நிலயத்திற்கு வைத்திருப்பதை, தமிழர்களை இழிவுபடுத்துவதாகக் கருதுவதால், இப்பெயரை மாற்றி, அதன் பழம்பெயரான 'கல்லக்குடி' யென்றே மாற்றுவதற்கு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கிறது.

ஆச்சாரியார் கொண்டுவந்திருக்கும் புதிய கல்வித் திட்டம், பிற்போக்கு வகுப்பாளர்களை மேலும் பாதிக்கும் எனக் கருதுவதால், மேற்படி கல்வித் திட்டத்தை உடனடியாகக் கைவிடும்படி ஆச்சாரியாரைக் கேட்டுக்கொள்வது என தீர்மானிக்கிறது.

தீக்குச்சி தொழிற் சாலைகள்

'செஸ்' வரிவிதிக்கமுயற்சி

பம்பாய், அக். 13—

அகில இந்திய கதர்—கிராமக் கைத்தொழில் போர்டின் உற்பத்தித் திட்டக் கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் பம்பாயில் நடைபெற்றது. தீக்குச்சி உற்பத்தித் தொழில் சம்பந்தமாக, தொழிற்சாலைகளை நான்கு வகுப்புகளாகப் பிரித்துள்ளனர். ஆண்டுக்கு 5 லட்சம் குரோசுக்கு அதிகமாக உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் முதல் வகுப்பிலும் அதற்குக் குறைவாக உற்பத்திசெய்யும் தொழிற்சாலைகள் இரண்டாம் வகுப்பிலும், தினசரி 100 குரோஸ் உற்பத்தி செய்பவைகளை மூன்றாம் வகுப்பிலும், ஏனையவைகளை நான்காம் வகுப்பிலும் சேர்க்கப்பட்டுள்ளன.

முதல் வகுப்பைச் சேர்ந்த தொழிற்சாலைக்கு ஒரு குரோஸ் தீப்பெட்டி உற்பத்தி மீது ரூ. 0—4—6 'செஸ்' வரியும். இரண்டாம் வகுப்பிற்கு 1½ அணா வீதம் மான்யம் அளிக்கவும், மூன்றாம் வகுப்பிற்கு 4½ அணா வீதமும், நான்காம் வகுப்பிற்கு 6 அணா வீதம் மான்யம் அளிக்கவும் கமிட்டி சிபாரிசு செய்துள்ளது.

மாதத்திற்கு சுமார் 36 கோடி தீப்பெட்டிகள் உள்நாட்டிற்குத் தேவைப்படுகிறது.

காட்சி கண்காட்சியே!

கல்கத்தா, அக். 14—

அகில இந்திய காங்கிரஸ் மகாநாடு நடக்கவிருக்கும் கல்யாணியில், ஒரு பிரும்மாண்டமான கைத்தொழில் கண்காட்சி நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. சுமார் 20 ஏக்கர் விஸ்தீரணத்தில் 624 ஸ்டால்கள் அமைக்கப்படும். 1928-ம் ஆண்டுக்குப் பிறகு, இப்போது தான் காங்கிரஸ் மீண்டும் கண்காட்சி நடத்துகிறது.

ஒடக்காடு இளைஞர் முன்னேற்றக் கழகம்

மேற்படி கழக அமைப்பு கூட்டம் 3—10—53ல், தோழர் அ. மதியழகன் தலைமையில் நடைபெற்றது அவ்வமயம் தோழர்கள் கிருட்டிணமூர்த்தி செயலாளராகவும், கந்தசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின் தோழர்கள் கந்தசாமி, கிருட்டிணமூர்த்தி, பழனிச்சாமி ஆகியோர் கழகத்தின் வேலைத் திட்டத்தைப் பற்றி பேசினர். இறுதியில் தோழர் அ. மதியழகன் பேசுகையில், இளைஞர்கள் எங்ஙனம் முன்னேற்றமடைய வேண்டும் என்பதைக் குறித்து சொற்பொழிவாற்றினர். மறைந்த திரு. வி. க. அவர்கட்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

சென்னை சர்க்காரின் புதிய ஆரம்பக் கல்வி திட்டம்

மத்திய ஆலோசனை போர்டில் முதலில் விவாதத்திற்கு வரும்

சென்னை, அக். 14—

சென்னை சர்க்காரின் புது ஆரம்பக் கல்வித் திட்டம், மத்தியக் கல்வி ஆலோசனை போர்டால் முதலில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

இப்போர்டு, புது டில்லியில், நவம்பர் மாதம், கல்வி மந்திரி மௌலானா அபுல்கலாம் ஆசாத் தலைமையில் கூடவிருக்கிறது.

இப்போர்டு கூடுவதற்கு முன், இந்த ஆரம்பத் திட்டக் கல்வியைப் பரிசீலனை செய்ய இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பாருலேகர் கமிட்டி, அதற்குள், தன் சிபாரிசுகளைப் போர்டுக்கு சமர்ப்பித்துவிடும்.

இராஜகோபாலாச்சாரியாரால் கொண்டுவரப்பட்ட இக்கல்வித் திட்டம், கிராமப் பகுதிகளில் அமுல் செய்யப்படவிருந்ததென்றும், பள்ளிக்கூட நேரத்தை தினத்திற்கு 3 மணியாகக் குறைத்தும், குழந்தைகள், பெற்றோர்களின் தொழிலில் அதிகமாக ஈடுபட வசதி அளிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததென்பதும் தெரிந்திருக்கும்.

கண்மூடி வழக்கத்தால்........!

கௌஹாத்தி, அக். 14—

பிரசவித்த ஒரு பெண், ஏதோ உளறினாள் என்பதற்காக, பேய் பிடித்திருக்கிறது என்று சுற்றத்தார்கள் எண்ணி, ஒருபூசாரியைக் கொண்டு வந்தனர். பூசாரி கொடுத்த அடியும் உதையும் தாங்காமல், அப் பெண் மரணமடைந்தாள் என்ற துக்ககரமான செய்தி பர்தோலா கிராமத்திலிருந்து கிடைத்திருக்கிறது.

புதுக்கோட்டையில் பொதுக்கூட்டம்

திருவள்ளுவர் நகர், அக். 12—

11—10—53 மாலை 6 மணிக்கு திலகர் திடலில் தோழர் ச. கு. சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில் "யார் காட்டு மிராண்டிகள்" என்ற பொருள் பற்றி தோழர் ஆசைத்தம்பி 2¼ மணி நேரம் பேசினார். கூட்டம் இனிது முடிந்தது.

தென்னாற்காடு மாவட்டத்தில் ஓர் 'ஆச்சாரியார்'

(அ) நீதிபதியின் ஆஸ்திகப் பிரசாரம்

கடலூர், அக். 13—

திருப்பாதிரிப்புலியூர் மாணிக்கவாசக மன்றத்தின் 7-வது ஆண்டு விழா, சனி, ஞாயிறு ஆகிய இருதினங்களில் பாடலீஸ்வரர் கோயிலில் நடைபெற்றது.

முதல் நாள் விழாவிற்கு அட்வகேட் டி. சுந்தரேசய்யர் தலைமை வகித்தார். எம். கே. ராசகோபாலாச்சாரியார் பேசினார்.

மறுநாள் விழாவிற்கு தென்னாற்காடு மாவட்ட செஷன்ஸ் நீதிபதி சி. ஆர். விசுவநாதய்யர் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில், "பிள்ளையார் சிலை உடைப்பினாலோ, கிருட்டிணன் சிலை உடைப்பினாலோ மக்களின் தெய்வபக்தி குறைந்து விடாது; இந்தியாவில், நாத்திகர்கள் என்று யாருமில்லை; வேண்டுமென்றே ஜம்பத்திற்காக சிலர் நாத்திகம் பேசுகின்றனர்; சில நாட்களுக்குள், தானாகவே, இந்தப் புத்தி மறைந்துவிடும்." என்றார்.

வந்தது ஆபத்து!

லண்டன், அக். 14—

எலிகளைக் கொல்லக் கூடிய மின்சார வலையொன்றை ஒரு பிரிட்டிஷ் கம்பெனி தயாரித்தது; ஆனால், இது, எலிகளை விட மனிதர்களையே கொன்று விடுமென்று தோன்றியதால், மீண்டும் சரியாக அமைக்கும்படி மின்சார அபிவிருத்தி சங்கம் திருப்பி அனுப்பிவிட்டதாம்.

மர்மமில்லையே!

கெய்ரோ, அக். 14—

பாகிஸ்தான் கவர்னர்—ஜெனரல் குலாம் முகம்மது, மத்திய கிழக்கு நாடுகளுக்கு 19ந் தேதி புறப்படுகிறார். பாரசீகத்திற்கும், பின்னர், ஈராக், ஸவூதி அரேபியாவுக்கும் விஜயம் செய்த பின்பு ஸ்விட்ஸர்லாந்து செல்வார்.

விருதுநகர் நகரசபை வரவேற்பை நிதி அமைச்சர் மறுத்ததேன்?

விருதுநகர், அக். 13—

விருதுநகர் நகரசபையின் சார்பாக வாசித்தளிக்க இருந்த வரவேற்பு இதழை, சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

நிதி அமைச்சர், கல்நாட்டு விழா குறித்து விருதுநகருக்கு வந்திருந்தார். நகரசபைத் தலைவர் எம். எஸ். பி. நாடார் வரவேற்புப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டபோது, அமைச்சர் சுப்பிரமணியம், நகரசபையின் எந்த வரவேற்புப் பத்திரத்தையும் பெறுவதற்கில்லையென்று கூறினார்.

இந்திப் பித்தர்களே பலம் பெற்று இருக்கிறார்கள்!

வைதிக 'இந்து'க்களின் உத்தியோக வெறி

பிரதேச மொழிதான் செங்கோலோச்சும்

இந்தியைக் கற்பவர் தொகை என்றென்றைக்கும் குறைவுதான்!

'பாரத தேவி' விமர்சனம்!

"இந்தியா? ஆங்கிலமா?" என்ற தலைப்பில் 'பாரததேவி' இதழ், 14—10—53 அன்று தலையங்கம் தீட்டியிருக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ள சிலபல வரிகளை எடுத்துக் கீழே தந்துள்ளோம்.

"இந்தி போதிய வேகத்தில் முன்னேற்றம் அடையாததற்கு இரு முக்கிய காரணங்கள் கூறலாம். முதலாவது, இந்தி வாதிகள், "இது சுத்த இந்தியாக இருக்கவேண்டும் கலப்படம் கூடாது" என்று செய்யும் பிடிவாதமாகும். இந்திப் பித்தர்களின் வைதிக நற்சமயம் ஓங்கியிருக்கிறது"

"இந்தியை மக்கள் உற்சாகத்துடன் ஏற்காததற்கு அதைப் போதிப்பதில் கட்டாயமுறை கையாளுவது இரண்டாவது காரணமாகும். ஆங்கிலம் படித்தவர்களுக்கு சர்க்கார் உத்தியோகம் கிடைக்கும் என்று தெரிந்ததும், இந்தியாவில் வைதீக இந்து முஸ்லீம்கள் உட்பட அதைக் கற்க ஆரம்பித்தனர்."

* * *

"பிரதேச மொழிதான் மொழிவாரி ராஜ்யங்களில் செங்கோல் செலுத்துமாகையால், தேசிய மொழியான இந்தியைக் கற்பவர்களின் தொகை மிகச் சிறியதாகத்தான் இருக்கும் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை."

* * *

"இந்திப் பித்தர்களின் குறுகிய பிடிவாத நோக்கத்தைப் பார்க்கும்பொழுது, தேசிய மொழியான இந்தி எதிர்பார்த்த வேகத்தில் முன்னேற்றமடையாது என்றே அஞ்சவேண்டியிருக்கிறது."

திரு. வி. க.—வுக்கு இரங்கல்

சென்னை, அக். 12—

மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கட்கு இரங்கல் தெரிவிப்பதன் பொருட்டு, பச்சையப்பன் கல்லூரி 10—10—53 மாலை 3-15 மணிக்கு மூடப்பட்டது. 3-20 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் ஆசிரியரும் மாணவரும் கூடினர். கல்லூரித் தலைவர் ஆர். கிருட்டிணமூர்த்தி அவர்களின் தலைமையின் கீழ் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் வரதராசனார் அவர்கள் தமிழ்ப் பெரியார் திரு. வி. க-வின் தொண்டினைப் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். மாணவர்களின் சார்பாக தோழர்கள் டி. விஸ்வநாதன், எம். கே. தசரதன், தனசேகரன் ஆகியோர் பேசினர். இறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

தொழிலாளர் சங்க வேண்டுகோள்

சென்னை, அக் 10—

அக். 8-ந் தேதி தோழர் எஸ். சி. சி. அந்தோணி தலைமையில் நடைபெற்ற சென்னைத் தொழிலாளர் யூனியன் கூட்டத்தில், திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. திரு. வி. க. அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப அனைவரையும் உதவி செய்யக் கேட்டுக்கொள்ளப்பட்டது. திரு. வி. க. வின் மறைவு நாளை ஆண்டுதோறும் ஓய்வுநாளாக விடும்படி அரசியலாரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★

திரு. வி. க. மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ள மக்கள் மன்றங்கள்

பொள்ளாச்சி தி. மா. மு. கழகம்; மீவை இளைஞர் மன்றம், சென்னை; சலகண்டபுரம் தி. மு. கழகம்; கன்னிவாடி தி. மு. கழகம்; திருவில்லிபுத்தூர் தி. மு கழகம்; தாத்தையங்கார் பேட்டை தி. மு. கழகம்; கலையம்புத்தூர் தி. மு. கழகம்; தாராவி தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்; திருவாரூர் தி. மு. கழகம்; அன்னதானப்பட்டி தி. மு கழகம்; சிதம்பரம் தி மு. கழகம்; தூத்துக்குடி தூய சவுரியார் தமிழ் இலக்கிய மன்றம். கே. எஸ். பாண்டியன் படிப்பகம், திருவல்லிக்கேணி; பாளையங்கோட்டை தி. மு. கழகம்; ஊசூர் வட்டார ஆரம்ப ஆசிரியர்கள் கூட்டம்; ஆலந்தூர் தி. மு. கழகம்; விழுப்புரம் நகர மன்றம்; திருச்செந்தூர் தி. மு. கழகம்; வாணியம்பாடி திருவள்ளுவர் கழகம்.

★

திரு. வி. க. மன்றம்

கோவை, அக். 12—

11—10—53ல், "கோவை முரசு" ஆசிரியர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் துவக்க விழா ஆரம்பமாயிற்று. அதுபோது, மன்ற நிர்வாகத்திற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

★

திரு. வி. க. நினைவுப் படிப்பகம்

சிலையம்பட்டி, அக். 10—

7—10—53-ல் நடந்த திறப்பு விழாவிற்கு தோழர் எஸ். ராஜரங்கம் தலைமை வகித்தார். தோழர் இரா. சோமசுந்தரம் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் கே. ஏ. வடிவேல்தாஸ் படிப்பகத்தைத் திறந்துவைத்து, படிப்பகத்தின் அவசியத்தையும், அதன் நோக்கத்தைப் பற்றியும் பேசினார். தோழர் ஏ. ஜி. சாமி, திரு. வி. க. வின் உருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசினார்.

பாரசீக முன்னாள் பிரதமர் முஸாதிக்கின் இரு குமாரர்கள் சதி வேலைகளில் ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.